**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**

**OS No.1/2021**

2023-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18-ம் நாள் 1872-ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின் படி வாதி/பிரதிவாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

## Chief Examination of PW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தராஜ் | தந்தை பெயர் | ரெங்கசாமி |
| கிராமம் | வல்லவராயன்பட்டி | தாலுகா | கந்தர்வகோட்டை |
| சமயம் | இந்து | ஜாதி | |
| வயது | 50 | தொழில் | விவசாயம் |

நாள் : 18.12.2023

வா.சா.2

முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். ராமச்சந்திரன் இடம் விற்பதாக என்னிடம் கேட்டார். ராமச்சந்திரனின் அப்பா பெயரில் சொத்து இருப்பதாகவும், தன்னுடைய பங்கை மட்டும் விற்பதாக சொன்னார், நான் வேறு யாரிடமாவது விற்க போகிறேன், இல்லை என்றால் தன்னுடைய அண்ணன் சுப்பையனிடமே விற்று விடுறேன் என்று சொன்னார். அதன் பிறகு விலை பேசி, ரூ.2,00,000/- பணம் வாங்கிக்கொண்டு சுப்பையனிடமே ராமச்சந்திரன் விற்று விட்டார். சுப்பையன் அதை எழுதி வாங்கிக்கொடுக்க சொன்னார். தருவதாக சொல்லிவிட்டு ராமச்சந்திரன் எழுதி எதுவும் கொடுக்கவில்லை. இருவரும் எனக்கு மாமா உறவுமுறை.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.